






# We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 26.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்












We Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- **விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து புதிதாக தோற்றுவிக்கப்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தொடக்க விழா (நவ. 26) இன்று நடைபெறுகிறது.**
  - **செய்தி துளிகள்:**
    - வேலூரை பிரித்து வேலூர், திருப்பத்தூர் (ம) ராணிபேட்டை எனவும், நெல்லையை பிரித்து நெல்லை (ம) தென்காசி எனவும் காஞ்சிபுரத்தை பிரித்து காஞ்சிபுரம் (ம) செங்கல்பட்டு ஆகிய புதிய மாவட்டங்கள் உருவாக்க அரசாணை தமிழக அரசால் ஏற்கனவே வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தேசிய நிகழ்வுகள்

- **சிறப்பு பாதுகாப்பு படை (எஸ்பிஜி) சட்டத்திருத்த மசோதா மக்களவையில் தாக்கல்** செய்யப்பட்டது.
  - **செய்தி துளிகள்:**
    - இந்த புதிய மசோதாவின்படி, தற்போது பதவியில் இருக்கும் பிரதமருக்கும், அவருடன் தங்கியிருக்கும் குடும்ப உறுப்பினருக்கும் எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும்.
    - முன்னாள் பிரதமருடன் வசிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பதவியில் இருந்து விலகிய

பிறகு 5 ஆண்டுகளுக்கு மட்டுமே எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும்.

- தற்போதுள்ள எஸ்பிஜி சட்டப்படி முன்னாள் பிரதமருக்கும் அவர் குடும்ப உறுப்பினருக்கும் கால வரையின்றி எஸ்பிஜி பாதுகாப்பு அளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

- **பெரு நிறுவனங்களுக்கான வரியை குறைப்பதற்கான வரி விதிமுறைகள் சட்டத்திருத்த மசோதாவை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் அறிமுகம்** செய்தார்.
  - **செய்தி துளிகள்:**
    - நாட்டில் அந்நிய நேரடி முதலீடுகளை அதிகரிக்கும் பொருட்டு, பெரு நிறுவனங்களுக்கான வரியை 30% இருந்து 22% -மாக மத்திய அரசு அண்மையில் குறைத்தது குறிப்பிடத்தக்கது.
    - இதற்கான அவசர சட்டம் செப்டம்பர் 20 அன்று கொண்டு வரப்பட்டது.
    - அரசமைப்பு சட்டப்படி நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாத வேளையில், குடியரசு தலைவர் மூலம் இயற்றப்படும் அவசர சட்டங்களுக்கு 6 மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **டேவிஸ் கோப்பை இறுதி ஆட்டத்தில் கனடாவை வீழ்த்தி 6-ஆவது முறையாக ஸ்பெயின் சாம்பியன்** பட்டம் வென்றது.
    - **செய்தி துளிகள்:**
        - இப்போட்டி புதிய முறையில் ஸ்பெயின் தலைநகர் மாட்ரில் நடைபெற்று வருகிறது.
        - ஸ்பெயின் ஏற்கெனவே கடந்த 2000, 2004, 2008, 2009, 2011-இல் டேவிஸ் கோப்பை பட்டத்தை வென்றுள்ளது.
        - ஒரே நகரில், ஒரே வாரத்தில் 18 நாடுகளின் அணிகள் மோதிக் கொண்டது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 26 ஆம் தேதி இந்திய அரசியலமைப்பு தினம்** (அ) சம்விதன் திவாஸ் அனுசரிக்கப்படுகிறது.
    - **செய்தி துளிகள்:**
        - 1949 ஆம் ஆண்டில் இந்த நாளில், இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு 1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்தது. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் (எம்.எஸ்.ஜே.இ) அரசியலமைப்பு தின கொண்டாட்டத்தை அறிமுகப்படுத்தியது.
        - இந்த ஆண்டு இது அரசியலமைப்பு தினத்தின் நான்காவது பதிப்பாகும் (அரசியலமைப்பை

ஏற்றுக்கொண்ட 70வது ஆண்டுவிழா) இது 2015 அக்டோபரில் நிறுவப்பட்டது, இது சட்டமன்றத்தின் வரைவுக் குழுவின் தலைவர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 125 வது பிறந்த ஆண்டு விழாவின் நாடு தழுவிய கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டது.

## திருக்குறள்

**குறள் எண் : 29**

அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயும் காத்தல் அரிது.**

**விளக்கம்:** நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறி நின்ற பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344

www.weshineacademy.com